ஸ்ரீமுருகன் பிரசுரம் No. 1

உ

முத்தமிழ் க்ஷேத்திரம் மதுரகவி

V. நடராஜ பிள்ளையவர்கள்

இயற்றிய

குமரநாதன்

பஜனைப் பாட்டு.

முதற் பாகம்



6-JAN 1931

பப்ளிஷர்

...ீமுருகன் புத்தகசாலை

...ரமண்டபம், மதுரை.

...] 1930. [விலை அணு 2.

...ி விலாஸ் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

Q26:417
...
177776

16.

ஸ்ரீமுருகன் பிரசுரம் No. 1

உ

வேலுமயிலுந் துணை

முத்தமிழ் க்ஷேத்திரம் மதுரகவி

V. நடராஜ பிள்ளையவர்கள்

இயற்றிய

குமரநாதன்

பஜனைப் பாட்டு.

முதற்பாகம்

பப்ளிஷர்

ஸ்ரீ முருகன் புத்தகசாலை

புதுமண்டபம், மதுரை.

மதுரை மீனாக்ஷி விலாஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது

[Registered] 1930 [விலை அணா 2

OF THE
6 - JAN 1931

177716

2025
784.0954

உ

வேலுமயிலுந் துணை.

குமரநாதன்

பஜனைப்பாட்டு.

விநாயகர் காப்பு

வெண்பா

அமரநா தன்மருகன் ஆறுமுக வேலன்
குமரநா தன்பஜனை கூற—விமலனருள்;
தும்பிக்கை யானைத் தொழுதே னெனதுளத்தில்
நம்பிக்கை கொண்டின் றுள்.

6-JAN 1931

பழனிநாதன் வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ரூபகம்.

குமரநாதன் குணப்ரபோதன்
கோலா கலா சிவ (கும)

குகார்ஜ்ஜிதந் திருமலரடி
மகாற்புதந் தருநலஜெய (கும)

குறுமாமுனி பெறவேதமிழ்
திறமோடுரை யறுமாமுக (கும)

குறவர்நாடத் தருவின்வேடத்
திறமைநீடப் பெறுவிசேடக் (கும)

குருவாதர கருணாகர
திருவாமன மருகாகன (கும)

குளிர்கா வினிலே குறமகள்
வளிமா மணமே பெறுசிவ (கும)

குக்குடக்கொடி பொற்கரத்தினிற்
பக்குவப்படிபி டிக்குநற்பழனிக் (கும)

குறித்ததொண் டருக்கருள்
செறித்தநற் றிருப்புகழ்க் (கும)

கூறுங்கள் பக்திச்சந்தப் பாடலும்நீடத்
தேறுங்கள் சித்தப்பந்தத் தாடலுமோடக் (கும)

கோஷிக்கும் ஸ்காந்தத்தில்
பாஷிக்கும் ஸ்ரீகங்கை
கோத்ர நடராஜன் தோத்ரப்ரிய (கும)

தாயிடத்தில் அன்பில்லாத என்ற வர்ணமெட்டு.

இராகம்-காப்பி—தாளம்-ஏகம்.

பல்லவி.

கோழிக்கொடிக் கந்தன் பாதங் கும்பிடுவீரே (கோ)
கும்பிடுவீரே தினம் நம்புவீர் சீரே (கோ)

அநுபல்லவி.

ஆழிக்கரை யோரத்திலே யமர்ந்திடுஞ் திருச்செந்தூரன்
நாழிக்கிணறுனத்வீத ஞானபண்டிதன் (கோ)

பாதிமதி சூடியோர்க்கு ப்ரீதியுடனே செவியில்
ஆதிமறை யோதுசீல ஆறுமாமுகன் (கோ)

நான்முகனைச்சிறையிலிட்டோன் நாடுமன்பர் மனத்திலுற்றோன்
வான் அமரர் துயரம்நீக்க வந்ததேசிகன் (கோ)

ஞாலமெல் லாந்துதிக்கும் கோலமிகு மதுரைவளர்
நீலநட ராஜன்போற்றுந் தேவஷண்முகன் (கோ)

கைராட்டினமே காந்திகைபாணம் என்ற மெட்டு.

இராகம்-யமுனாகல்யாணி—தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தன்-கல்யாணமே தேவ கண்காட்சி-நாளுங்
கண்டாலானந்த மாட்சி-கழுகாசலத்திற் (கல்)

அநுபல்லவி.

செல்வாக்கு தெய்வானை ஜேஷ்ட குறமானை
இல்வாழ்க்கையாய் நாடியே—கோலாகலமுடன்
உல்லாசமாய்க் கூடியே—லீலாவினோத (கல்)

சீர்த்தி பெறுந்தொண்டர் பார்த்து மகிழ்ந்திடப்
பூர்த்திப் பதந் தேடியே—நடராஜன்
வாழ்த்துப் பதம் பாடியே—புகழ்ந்திடத்திருக் (கல்)

பவனகிரியதனில் வரும் என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்—தாளம்-ஆதி.

பல்லவி.

குமரகுகா வரமருளுங் குருநாதா பழனிமலைக் (கும)

அநுபல்லவி.

சமர சற்குரு விமரிசைப்பெறு
தாண்டவ மயி லாண்டவ திருக் (கும)

தொகையறு.

நாவாரப் பாடிய அருணகிரி நாதன்முன்
நாடியருள் தந்த வரதா
காவா திருந்திடி லேற்குமோ வுன்புகழ்
கண்மயனே சஷ்டி விரதா

பாட்டு.

பஞ்சாபிஷேக மூர்த்தி
பார்முழுது மேவுன் கீர்த்தி
அஞ்சலி செய்நட ராஜன் புகழும்
ஆஷி பெறுமீ ஞாஷி மகிழுங் (கும)

சோமசுந்தரா சர்வேசா என்ற மெட்டு.

இராகம்-கேதார கௌளம்—தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஞான தேசிகா சிங்காரா
நம்பினேனையா ரகு பதிமருகனே (ஞா)

மகுடங்கள்.

நயம் படவுரை யெனுங் கிழவிசொல்
ஜயம் பெறவுளங் கனிந்தொரு வரம்புகல் (ஞா)
நடம்புரிந் திடும்பரன்
தடஞ்செவி யிடம்ப்ரணவமுறை (ஞா)
யாசித்தும் யோசிப்பதோ முறை
நேசித்தும் மாசிற் பதாம்புயந்துணை (ஞா)

அநுபல்லவி.

மீனலோசனி மேன்மைச் சேயனே
வேதாவைச் சிறையேபுரி நாதாமெய்க்கிருபாநிதி (ஞா)

சரணம்.

மண்டலம் புகழும் மாணிக்க தீபா
மருவிடும் வள்ளிதெய் வானை சல்லாபா
தொண்டன் நடராஜன் தோத்ரப்ரதாபா

சூதினி யேதுமி லாதெதிர்
வாதனி மாமயி லேறியே (ஞா)

ஆடு புாம்பே என்ற வர்ணமெட்டு.

ஆடுமயிலே குதித் தாடுமயிலே—கந்தன்
ஆறுமுகன் சேவடிகண் டாடுமயிலே (ஆ)

நாடுமயிலே விளை யாடுமயிலே
நாதகுக வேலனைக்கொண் டாடுமயிலே (ஆ)

சேவலொடு வேலையுங்கைக் கொண்டதீரன்
செஞ்சடையர்க் காதிமறை விண்ட சீரன்
தேவ சேனபதியாய் நின்றவீரன்
தென்பரங்குன் றாரினிற்கண் டாடு மயிலே (ஆ)

காட்டுக் குறத்தியவள் மணவாளன்
கனக மலையெனும்பன் னிருதோளன்
பாட்டுக் கிரங்கியருள் செய் குணாளன்
பழனி மலையினிற்கொண் டாடுமயிலே (ஆ)

மாறுபடப் பேசுவஞ்ச மடையாரை
மதிப்பதிங் கில்லையென மகிழ்வுடனே
கூறுமடி யார்கள்நெஞ்சிற் குலவிடுமா
குமரேசன் காதிலுரைத் தாடுமயிலே (ஆ)

எத்திசையும் பரவுமுத் தமிழ் க்ஷேத்ரம்
இலங்கிடும் நடராஜன் தமிழ் தோத்ரம்
நத்திடவே வருங்குக னருட் பாத்ரம்
நலம்பெறக் கண்டோமென் ஞுடு மயிலே (ஆ)

ஏருத மலைதனிலே என்ற மெட்டு.

சீரான பழனியிலே
திகழுங் கந்த நாதனுக்கே
தாராள மாக நல்ல
தனிப்பா லபிஷேகமடி (சீ)

தேவாதி தேவனடி
செங்கைவேல் முருகனுக்கே
தேவாமிர்தம் பன்னீரொடு
செந்தே னபிஷேகமடி (சீ)

காணுத காக்ஷியடி
கழுகாசல நாதனுக்கே
பூணுத மாக்ஷி மணி
புழுகாபி ஷேகமடி (சீ)

வேதாந்த மதுரையிலே
வித்வ நட ராஜனுக்கே

போதாந்த வரமருளும்
புண்ய முரு கேசனடி (சீ)

ஸ்ரீராமபாதமா என்ற வர்ணமெட்டு.
இராகம்-அமிர்தவாகினி—தாளம்-ஆதி.

பல்லவி.

தேவசேனுபதி தீனதயாநிதி
ஜீவா தரனே ஆதி (தே)

அநுபல்லவி.

பாவலங்காரனே பரங்கிரியூரனே
பாசபந்த நாசகந்த நேசமுந்த வாமுனே (தே)

சரணம்.

காவிற்குற மாமகளைப்புணர் காக்ஷிக்குரு தேசிகா
கவலைதவிர்த்துன் னருள்தருங் கடம்பாவெந்தாய் குகா

அநுபல்லவித்தொடர்.

சேவைப்ரசாதமே சிந்தித்தேனீதமே
சித்தத்தொடுவரம் பத்தித்திடவுனை
நத்தித்தொழுதனன் பாதமே (தே)

சரணத்தொடர்.

தாதித்தை யென்றுநடஞ்செயுஞ் சங்கரன் றன்சுதா
தஞ்சமுன் செம்பொற்பதமதை சரணஞ்செய் தேன்சதா

177716.

அநுபல்லவித்தொடர்.

சாதிப்ப தேனைய்யா சண்முகனே மெய்யா
சந்தம் பொங்குஞ் செஞ்சொல் நடராஜன்
தமிழ்மொழி யுகந்தருள் வேலய்யா (தே)

இராகம்-தேசிகம்—தாளம்-ஆதி.

வண்ணச்சந்தம்.

பால தண்டபாணி யுன் பாதம்
பாடி நின்றேன் பேணி பரமனருள் (பா)

மகுடங்கள்.

கோலமாமலர் மேவிடும்பிரமனைக்
குட்டிச்சிறை யிட்டுத்திற மிகுஜெய (பா)
கொக்கரக் கோவெனுங் குக்குடக்கொடி
பொற்கரத்தினில்பி டிக்குநற்குமர (பா)
கொஞ்சுமாமொழி வஞ்சமாதர்கள்
மிஞ்சுமாமயல் நெஞ்சுறமேலே
கூடியன்பர் நேசம்—பெருகிட
காடி மந்த்ரோப தேசம்—திருந்திடக்
கோரினேன் பாரினில்
தீரனே வரமருள்
கும்பிடு கந்தப்பா வனுதினம்
நம்பினேன் சந்தப்பா நடராஜன்
அன்புறுஞ் சொந்தப்பா கலியுகமதி
லொரு கடவுளே (பா)

ஆனந்தம் ஆனந்தம் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே—துதி
பாடுங்கள் பாடுங்கள் பாடுங்களே (பா)

அநுபல்லவி.

பச்சை மயில் வாகனனே
மெச்சும் வள்ளி மோகனனே தினம் (பா)

சரணம்.

நாடுங்கள் வித்வ குகன்பதந்தேடி
நற்றவசாதுசங் கத்துறவாடி
பாடுங்கள் ரெட்டியார் சிந்தொரு கோடி
பண்டுவினை வென்றே மென்று கொண்டாடி (பா)

பூதலந் தன்னிற்பெண் ணாசையை நீக்கி
பொய்யுரையற்பர் சிநேகத்தைப் போக்கி
சீதமலர்ப்பதத் தொண்டுக்காளாக்கி
சித்தம் நிலைபெறு மார்க்கமுண்டாக்கி (பா)

ஏதிந்த மானிட வாழ்வு நில்லாது
என்றுஞ் சுகத்தோ டிருக்க விடாது
வேத குமரன் சரண் மறவாது
வேண்டிட நற்பதங் கிட்டுந் தப்பாது (பா)

கோஷித்திடும் புகழ்ப் ப்ரபந்த வேதம்
கொண்டாடிப் போற்றத் தருவான் மெய்ப்போதம்
பாஷித்திடும் நட ராஜன் சங்கீதம்
பக்ஷமுடன் நத்துவார்க் கருட்ப்ரசாதம் (பா)

சண்முகா குகா என்ற வர்ணமெட்டு.
இராகம்-காகாப்ரீயா—தாளம்-ஆதி.
பல்லவி.

கந்தநாதனே கண்பார்
கதிதா விதுததி (கந்)

அநுபல்லவி.

செந்தில் வேலய்யா சிறியேனுன் மெய்யா
சேவை நீதந்தாள் சிவனாரின் மைந்தா (கந்)

சரணம்.

காசினியோர் போற்றுங்
கண் கண்ட தேவா
பூஜித்தேனுன் பாதம்
புண்யாவென்னைக் காவா
நேச நடராஜன் சாஸ்வத குமேசா
நெடியமாலின் மருகா நொடியில் வாவென் முருகா (கந்)

அம்பாளென்பால் என்ற வர்ணமெட்டு.
இராகம்-அடாணா—தாளம்-ஆதி.
பல்லவி.

பண்டாரந்தான் பழனபுரியில் வாழும் (பண்)

அநுபல்லவி.

கண்டோ மெல்லாங்
கருணை காாவென்றோது (பண்)

சரணம்.

சிங்கார தேசுலாவு
மங்கான வேடமாது
பங்காள னும்பார் தொழும்

படிக்குள் உயர்
தடிக்கைப் (பண்)

மன்றாடு மாசிலாவ
ரன்றுனட ராஜனைவிற்
குன்றாதி லங்குசேவற்
கொடிக்கை யுடன்
நடிக்கும் (பண்)

சாத்மீகம் நமது என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு—தாளம்-ஆதி.

பல்லவி.

ஆத்மார்த்த முருகன்
அகிலலோ காதி (ஆத்)

அநுபல்லவி.

அகிலலோ காதி யருட்குண நீதி (ஆத்)

சரணம்.

சாத்விக பக்திஞான சாஸ்திர விர்த்திமோன
ஆஸ்திக சித்தியோகர் தோத்திரப் பிரியானந்தன் (ஆ)

தொகையறா.

முத்திக்கோர் வித்தென விளங்கிடு மெஞ்ஞான
மூர்த்தியம் பழனி வேலன்
சத்திக்கோர் புத்திரன் சகலகலா ரத்தினம்
தாஷ்டிகன் சுகுண சீலன்

பாட்டு.

சந்தத் தமிழ்மதுர சாகித்ய நடராஜன்
சொந்தக் கடவுளான செந்தியிற் கடம்பனுன (ஆ)

மயில்வாகனமேறி என்ற வர்ணமெட்டு.

இராகம்-அரிகாம்போதி—தாளம்-ஆதி.

பல்லவி.

மனமோகன முருகா வா மயின் மேல்
மாக்ஷியான காக்ஷித்யான (மன)

மகுடங்கள்.

வனக்கு றவனிதை
தனத்தி னியசுக (மன)

மகிழ்வுட னிகமதில்
விகசித வரமருள் (மன)

வானலோக நாதனுன
ஞானபாக வேத கான (மன)

வந்துந்தன் மைந்தனை யாண்டிடு (மன)

அநுபல்லவி.

கனவிலு முனையே
கருதினேன் குகனே

கஞ்சப் பதமதை யனுதினம்
கெஞ்சித் துதிசொலி வழிபட (மன)

7771

சரணம்.

குமர குருபரனே யாண்டருள் குகனே
கோழிக் கொடிபிடிக்குங் குமாஷண்முகனே
கமல முகவதனக் கௌரியின் மகனே
காசினி மேல் நடராஜன்
பூஜித கீத வுல்லாச (மன)

தயவில்லாத தேனவஞ்சம் என்ற வர்ணமெட்டு.
இராகம்-சுருட்டி—தாளம்-ஆதி.
பல்லவி.

பரம நாதனருள் பாலா—கண்
பாருங் கண்ய சீலா—கயிலைவளர் (பர)

அநுபல்லவி.

பாத கானமயில் வேலா—உன்
பதமீத கதி யருளுவாய் தகி
பரம்பொரு ளௌனுந் திகழ் பிரணவ (பர)

சரணம்.

ஜகமதி லெனக்கொரு தந்தையும் நீயே
சங்கடந் தவிர்ப்பதுன் பாரந் தெரிவாயே
சிகிமிசை வருங் குரு நாதா
ஸ்ரீகாரட ராஜனேதிடும்
செழுந்தமிழ் மணம்பெறுஞ் சிவ சிவ (பர)

முதற்பாகம் முற்றிற்று.

இதன் இரண்டாம் பாகம் வெளிவந்துவிட்டது.

விலை அணா 0—2—0.

ரூ. 1000 இனாம்!

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்த ஆறுமுக டி
ரையுள்ள உண்மையான மருந்துகள். தங்கமெடல்களும் ஏரா
மான நற்சாட்சிகளும் பெற்றது. மதுரை டாக்டர் ஆர். எஸ். பதி
அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற அதிசயமான மருந்துகளைப் பதி
னாயிரக்கணக்கான குடும்பங்களிலும், எஸ்டேட் முதலிய இடங்களி
லும் உபயோகிக்கிறார்கள். இது உண்மையல்லவென்று ஒப்புவிப்ப
வர்களுக்கு ரூ. 1000 இனாம் கொடுக்கப்படும்.

ஆர். எஸ். பதி மருந்து (ரிஜிஸ்டர்)

இது காலரா, வாந்திபேதி, ஜன்னி, சுரங்கள், தலைவலி, இருமல், குளிர் சுரம், வயிற்றுவலி, தேள்க்கடி, கண்வலி, பல்வலி, வெட்டுக் காயங்கள், ஆறாதபுண்கள், இடுப்பு, கை கால்வலிகள், வாய்வுக்குத்து, மார் அடைப்பு முதலிய 100 வியாதிகளுக்கு உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். பத்தியமில்லை.

புட்டி 1-க்கு விலை 0—6—0. தபால் செலவு வேறு.

சித்தர் சஞ்சீவி மாத்திரை (Regd.)

ஆச்சரியமான சுகபேதி மாத்திரை. குழந்தைகளும் பெரியவர்களும் உபயோகிக்கலாம். மாந்தம், சுரம், வாய்வுகள், வயிற்றுவலி, கபம், குன்மம், வாதங்கள் முதலிய 1000 வியாதிகளுக்கு உபயோகிக்கிற பெரிய புஸ்தகம் மருந்தோடு கொடுக்கப்படும்.

புட்டி 1-க்கு விலை அணா 8. தபால் செலவு வேறு.

"கெய்ரோடைன்" (ரிஜிஸ்டர்)

இது தாதுபுஷ்டிக்குக் கை கண்டது. வெள்ளை, மூலச்சூடு, மேகம், உஷ்ண வியாதிகள் தீரும். மலச்சிக்கல் வாய்வுகள், வயிற்றுவலி, க்ஷயம், இருமல், நீர்கீர் வியாதிகள், வாதநோய்கள், கண் மங்கல் குணமாகும். இரத்த விருத்தி, இரத்த சுத்தி, தேக புஷ்டி, பலம், அழகு தேகக்குளிர்ச்சி தரும். பத்தியமில்லை. கெடுதி இல்லை,
80 வேளை மருந்து புட்டி 1-க்கு விலை ரூ. 5. தபால் செலவு வேறு.

விலாசம்:— ஆர். எஸ். பதி அன் கோ, மதுரை.